**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**

**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**

**SC.No.20/2020 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.விஜியகுமார் |
| Father Name | விநாயகம் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.12.2024.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், முப்பதுவெட்டி, காலஸ்திரியன் பேட்டை தெருவில் வசிக்கிறேன். நான் வேன் ஓட்டுநராக பணிபுரிகிறேன். அ.சா.1,2,3 தெரியும். வழக்கில் இறந்த நடராஜனை தெரியும். நடராஜன் மகன்தான் அ.சா.1 ஆவார். ஆஜர் எதிரிகள் 7 பேரையும் எனக்கு தெரியும். எதிரிகள் 7 பேரும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். 02.03.2014 ம் தேதி எங்கள் ஊர் பள்ளியில் தமிழக அரசு விலையில்லா மிக்சி, கிரைண்டர் வழங்கி கொண்டிருந்தார்கள். அங்கு அ.சா.3 மணிகண்டன் சென்ற போது பிரச்சனை ஆனதாக கேள்விபட்டேன். அதன் பிறகு மதியம் 2 மணிக்கு முப்பதுவெட்டி பஸ்டாப்பில் நான், அ.சா.1 கோபிநாத், ரஞ்சித், நடராஜன், அ.சா.2 ராஜேந்திரன் மற்றும் ஊர்க்காரர்கள் 4,5 பேர் அங்கு இருந்தோம். நடராஜனும், ராஜேந்திரனும் பிரச்சனையை பேசி முடித்துகொள்ளலாம், இதோடு இந்த பிரச்சனையை விடுங்கள் என்று அங்கிருந்த எதிரிகள் 7 பேரிடமும் சொன்னார்கள். அப்போது

சிலம்பரசன், பாஸ்கரன் ஆகியோர் சிறிய பைப்பால் நடராஜனையும், ராஜேந்திரனையும் அடித்தார்கள். பிரேம், கண்ணன் ஆகியோர் கொம்பால் நடராஜனையும், ராஜேந்திரனையும் அடித்தார்கள். சரத், விக்கி, கபிலன் ஆகியோர்கள் கையால் நடராஜனையும், ராஜேந்திரனையும் முகத்திலும், வயிற்றிலும் அடித்தார்கள். அடிப்பட்ட இருவரையும் நானும், கோபி இருசக்கர வாகனத்தில் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். நாங்கள் மருத்துவமனைக்கு போவதற்கு முன்பே அங்கு மணிகண்டன் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். வேலூர், நீதித்துறை நடுவர் 3 நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் அளித்தேன். கு.வி.மு.ச பிரிவு 164ன் கீழ் நான் அளித்த வாக்குமூலம் தான் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**S/d. M.Selvam,**

**I Additional District Judge,**
**Ranipet.**